பதிவு M 4642.

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 27–3–49 | இதழ் ௩௯

★ முதலாளித்வ முகாம் ★

முன்னேறும் பிள்ளைகள்

நவீன பிரசார சாதனங்களில் பத்திரிகையும் ஒன்றாகும். முதலாளித்வ முறைக்கு மெருகிட்டு, மக்கள் கவனத்தைக் கவரும் வகையில் பலநிறங்கள் கூட்டி, நானாவிதமானகொள்கைக்கும் நாட்டில் செல்வாக்குத்தேட, பத்திரிகைச் சாதனத்தைக் காட்டிலும் இன்று வேறு பலம் பொருந்திய சாதனம் கிடைக்காது என்று கூறிவிடலாம். செய்தி ஸ்தாபனங்கள் பெரும்பாலும் பணமூட்டைகளின் சொத்தாகும். தங்களுக்குச் சாதகமான, தங்கள் ஆதிக்கத்திற்கு அரணான செய்திகளை மிகைபடுத்திக் கூறவும், புறம்பான செய்திகளை மறைக்கவும், வெளியிட்டாலும் தவறான பொருள்படும்படி சுருக்கி வெளியிடவுமான தந்திர முறையைக் கையாளுகின்றன. இச்செய்திகளைப் பிரசுரிக்கும் பத்திரிகைகளோ ஒன்று தவறாமல முதலாளிகளுடையது. இவைகளில் எழுத்தாளர்களாக இருப்பவர்களோ, சொந்த வாழ்வை மதிக்கின்ற அளவிற்கு, மக்களின் சுகத்தைப் பெரிதென்று கொள்வதில்லை. கற்றவர்கள் என்பவர்களிடமிருந்து மக்கள் எதிர்பார்ப்பதற்கு நேர் விரோதமாக, இவர்கள்எழுத்து இருக்கும். பணமூட்டைகளையாவது, பார்த்த முதல் பார்வையிலேயே, தங்கள் இல்லாமையின் விளைவாக ஏற்படும் இயற்கையான எரிச்சலின் காரணமாக, புரிந்துகொள்வார்கள் அவர்களால் தங்களுக்கு ஏற்படும் இன்னலகளை: பணமூட்டைகளுக்குப் பல்லிளித்துப் பல்லாண்டு கூறும் பேனா வீரர்களை, பிரசங்க பீரங்கிகளை, மக்களால் அவ்வளவு சுலபத்தில் புரிந்துகொள்ள முடிவதில்லை. மயக்கம் கொள்வர்; மீள வகையறியாது மங்குவர்.

அறிந்து செய்வோரும் உண்டு; அறியாமலே இத்தொண்டு புரிவோரும் உண்டு. அறிந்து செய்பவன் அயோக்கியன்; அறியாமல செய்பவன் அப்பாவி. ஆனால், இரண்டு பேரின் செயலினாலும், மக்களுக்குக் கிடைப்பது நல்வாழ்வு அன்று, நாசந்தான்.

இன்று, நமது நாட்டில் பெரிய பெரிய பத்திரிகைகள், ஆலை அரசுகளின் பாதுகாப்புப்படையாக ஆக்கப்பட்டு இருக்கின்றன. முதலாளித்துவமுறையை நிலை நிறுத்துவதுதான் அவைகளின் அருந்தொண்டு. வெறும் முதலாளித்துவ முறையை மட்டும் போதிப்பது என்பது,இந்தக் காலத்தில் எதிர்பார்க்கும் வெற்றியைக்கொடுக்கக்கூடியதன்று. எனவே மக்களுக்குள்ள மத நம்பிக்கையை, புராண இதிகாசங்கள் போதிக்கும் பொய் மலிந்த கொள்கைகளை, தன் நம்பிக்கையற்ற தாழ்வுணர்ச்சியை, தகுதியானது என்று சிந்தரித்து, அதற்குப பெயர், முன்னோர்கள் கண்ட மனுமுறை என்று கூறி, அதனைவழுவாமல் வாழ்க்கையில் அனுசரிக்க முயலுவதில்தான் உண்மையானஇன்பம் இருக்கிறது என்று ஆதாரங்களாகச் சில கதைகளை எடுத்துக் காட்டி, மக்களுக்கு ‘ஞானமார்க்கம்’ காட்டுவதாக, பத்திரிகையை நிரப்புவர். மேல்நாட்டினர், உலக சுகத்தை உதறித்தள்ளிவிட்டு, விஞ்ஞானஉண்மைகள் வீண் கனவு என்று கண்டுகொண்டு, இந்திய ரிஷிகள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கண்டுபிடித்த ‘மெய்ஞான’ வழியை மேற்கொள்ளத் துடியாகத் துடிப்பதாகத் தொடர்ந்து எழுதி வரும் இந்த ஏடுகள். ஆனால் அதே நேரத்தில் விஞ்ஞானம் தந்த இயந்திரசாதனங்களை, உடனடியாக அமெரிக்கா அனுப்பிவைக்கவேண்டும், பட்டுள்ள கடனுக்கு இங்கிலாந்து மேலும் தாமதிக்காமல் தரவேண்டும் என்றும், தவறாமல் எழுதுவர். ஆசை வெட்கமறியாது என்பதுமட்டுமல்ல, தங்கள்எழுத்தில் தெள்ளத்தெளியத் தெரியும் முரண்பாடு மக்கள்சிலரின் கண்களிலாவது படுமேஎன்றுசிந்திக்க மாட்டார்கள். பாமர மக்கள் மந்தமதியிலே அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை; அச்சப்படுவதற்குப் பதில், ஆர்வத்தோடு எழுதுகிறார்கள்.

முதலில்லாது–உழைப்பில்லாது–உடலிலே வலுவில்லாது—மக்களின் உழைப்பை உறிஞ்சுவதற்கான முறை, ஆண்டவன் பெயரால் இங்கு அமைக்கப்பட்டிருப்பது, வேறு நாட்டில் இல்லாத விசித்திரம். மிருக பலத்தால் அல்ல—உற்பத்திச் சாதனத்தால் அல்ல — பிச்சை புகும்

முறையால் அல்ல—இந்த அமைப்பு முறையின் கர்த்தாக்கள், சுகம் அனைத்தும் பெற்றது — பெற்று வருவது. ஆண்டவன் பெயரால் — பிறப்பின் பெயர் கூறி—அமைத்து வைத்திருக்கும் சுரண்டல் இயந்திரத்தால்தான் இவர்கள் சுகபோக வாழ்வு பெற்றுவர முடிகிறது. வரவினம் இவர்கள் ஏட்டிலே உண்டேயன்றி, செலவினமே கிடையாது. இவர்களின் வாழ்வைப் பெருக்க, உழைத்துப் போட்டவர்களுக்குக்கிடைத்த பலன் நாலுநல்ல வார்த்தைகூட கிடையாது. ஏகாதிபத்தியத்திற்கு நல்லபிள்ளைகளாக நடந்துகொண்டவர்களுக்காவது, ஏதோ கௌரவப் பட்டங்கள் கொடுத்துகண்ணியப்படுத்தினார்கள். ஆனால் நமது நாட்டு முதலில்லாத வியாபாரிகள், தங்களுக்குச் சுகத்தைத் தேடித் தந்திடுபவர்களுக்குக் கொடுத்தபட்டம் 'இழிகுலத்தோன்' 'மனிதனில் கடையன்' என்ற பட்டயங்களாகும். உழைத்தவர்களுக்கு, இந்த இருபட்டம் கிடைத்த பின்னரும் தன்மதிப்புப் பெற்று, தகுதியற்ற திட்டத்தை நொருக்கும் முயற்சியை மேற்கொண்டார்களில்லை. 'பாபி' என்று அகம்பாவத்தோடு அழைத்ததை அன்புரை என்று கொண்டு, புகழ்ந்து பாடினார் அவ்வாறு கூறினவர்களை. அந்த அளவிற்கு, மக்களை மதியிலிகளாக்கும் சக்தி அந்தச் சுரண்டல் இயந்திரத்திற்கு இருக்கிறது. பலநூறு ஆண்டுகளாக உழைக்காது ஒய்யார வாழ்வு வாழ்ந்து, அதற்கான ஒரு முயற்சியும் செய்யாது காலங் கழித்து, பிறர் புகழால் உயர்வு கொண்டிருக்கிறவர்களிடம், கொஞ்சம் தந்திர புத்திகூடுதலாக இருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லையல்லவா? ஓய்வு—அதுவும் கவலையற்ற ஓய்வு—அறிவுத்துலக்கத்திற்கு இன்றியமையாததன்றோ? முதல் போடாமல் வாழக் கற்றுக்கொண்டுள்ள இனம், முதலாளிகளின் முன்னோடும் பிள்ளைகளாக மாறி இருப்பது பொருத்தமுடையதுதானே? 'வாழ்வாவது மாயம்' என்பது இவர்களுடைய தாரகம். தத்துவ சாஸ்திரியின் மறுபதிப்பு. ஆம்! வாழ்வு மாயமானது; மயக்கத்தைத் தரக்கூடியது. இந்த உபதேசம் மக்களுக்குத்தான். முதலாளிகளுக்கு அல்ல. இந்த முடிந்த ஞானம்; சொந்தத்தில் அனுசரிப்பதற்குமல்ல. பாட்டாளிக்கு—உழைப்பவனுக்கு—உரிமைக்குப் போராடவேண்டிய மக்களுக்கு, இந்தத்தர்ம உபதேசம் செய்யப்படுகிறது. தங்கள் சுகத்திற்கு, மக்களால் முடிவு ஏற்படாமல் இருக்க இந்தக் 'கண்ணன் காட்டியவழி' தேவைப்படுகிறது!

அதிகாரஏடு – தத்துவசாஸ்திரி – பிரசாரஏடு—அனைத்தும் ஒரே அணியில் கச்சைகட்டி நிற்கிறது. எதிர் அணியில் மக்கள்—எலும்பும் தோலுமாக உள்ள மக்கள்! இவற்றிற்குத் துப்பாக்கியும், ஆண்டவன் அளித்ததாகச்சொல்லப்படும் மாயவாதமுமா ஆயுதம்? மக்களுக்குச் சிந்தனையும் தன்னம்பிக்கையும்தான் ஆயுதங்கள். துப்பாக்கி கருத்தைக் கொல்லாது. மாயாவாதம் அறிவியல் ஒளிமுன் ஓடி மறையக்கூடியது. தன்னம்பிக்கையும் சிந்தனையும் கொண்டுள்ள மனிதன் நிலைத்து நிற்கக்கூடியவன். அவன் கண்டதுதான் இன்று நாம் காணும் உலகம். நல்லதாக அமைக்கவும், தீமை தேடிக்கொள்ளவும் மனிதனால் முடியும். இதுவே மனித வரலாறு போதிக்கும் படிப்பினை. உலகத்தின் நடுநாயகமாகத் தன்னை ஆக்கிக்கொள்வதற்கு, மனிதன் எடுத்துக்கொள்ளும் முயற்சியைப் பொறுத்துத்தான், காலஅளவு குறுகுவதும் நீளுவதும் இருக்கிறது. நமது மக்கள் நிலையை மற்ற நாட்டவர்களோடு ஒப்புநோக்கும்பொழுது, மனிதன் மனிதனாக மாற எவ்வளவு காலம் பிடிக்குமோ? என்று பெருமூச்செறியவேண்டியதாக இருக்கிறது! முதாளித்வத்துக்கு முன்னோடும் பிள்ளைகளாகப் பத்திரிகைகளும், பிரசாரப் போக்கும் இருக்கும் வரையில், ஏழை மக்கள் நல் வாழ்வு பெற முடியாது.

❖

அறுபத்துமூவ

12-ம் பக்கத் தொடர்ச்சி

ப. ப:- சுவாமி உளறல் இல்லை. உண்மையே பேசுகின்றேன். இரண்டு சிலைகளைக் காணோம். நான் கண்டதையே நம்பமுடியவில்லை. அடியேன் என்னாலான அற்பகைங்கரியத்தைச் செய்யலாமென்று வந்தால் இங்கே ....

நா. கு:- ஓய்! சும்மா இருங்காணும். கைங்கரியமா? போனால்போகிறது. ஏதோ கெஞ்சினீரே என்று பெரிய மனசுபண்ணிக் கொஞ்சம் இடம் கொடுத்தால் நீர் சிலைகளையே காணோம் என்று சொல்லுகிறீர். இப்பத்தான் தெரியுதுங்காணும் உமக்கு இடங் கொடுத்ததே தப்பென்று.

ப. ப:- சுவாமி தெரிந்துகொண்டேன். நீங்கள் ரொம்பப்பெரியவாள், உமது பேச்சை நிறுத்தும். நான் போகிறேன்.

[பக்தர் மிகவருத்தத்துடன் வீடு திரும்பினார். போகும் வழியில்.....]

ப. ப:- (தனக்குள்ளேயே) குருக்களை என்னமோ உத்தமர் என்று நினைத்தேன். இப்பொழுதுதான் தெரிகிறது அவரைப்பற்றி ஊரார் சொன்னதெல்லாம் உண்மை என்று. அறுபத்துமூவர் விக்கிரகங்களுக்குப் பூசைசெய்யவந்தபோதுதான்குருக்களுக்குக் களைப்பு உண்டாயிற்று! உதவிக் குருக்களைப் பூசை செய்யும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார். சந்தேகமே இல்லை. சிலைகள் காணாமற்போனது அவருக்குத் தெரிந்துதான் இருக்கும். மற்றும் கண்ணன் ஒளித்துவைத்தது அந்தச் சிலைகளாகத்தான் இருக்கும். சரி, கண்ணன் வீட்டிற்குச்சென்று பார்ப்போம்.

[கண்ணன் தெருக்கதவை மூடிவிட்டுத்தன்உலைக்கூடத்தில் ஒரு விக்கிரகத்தை உடைத்து உருக்கிக் கொண்டிருந்தான். மற்றொரு விக்கிரகம் அரைகுறையாக ஒருமூலையில் மூடி வைக்கப்பட்டிருந்தது. பக்தருக்கு உண்மை விளங்கிவிட்டது. குருக்கள் சிலைகளைத் திருடி விற்றுவிட்டான்; கண்ணன் அவற்றை வாங்கி உருக்கிக்கொண்டிருக்கிறான் என்பதனைப் பக்தர் உணர்ந்து கொண்டார், கதவைத் தட்டி கையும் களவுமாக கண்ணனைப் பிடித்துக்கொடுக்கலாமா என்றுஎண்ணினார். ஆனால் அது ஆகிற காரியமா? ஆதலின் பக்தர் பலகணிவழியாக கண்ணன் வீட்டில் கண்ட காட்சியை நினைத்து நினைத்து உள்ளம் குமுறினார். பக்தர் கோயில் தர்மகர்த்தரிடம் சென்றார்.]

* * *

த:- வரவேண்டும். என்ன பூசைகளெல்லாம் உமக்குத் திருப்தியாக முடிந்தனபோலும்!

ப.ப:- ஆகா! நடந்தது அறுபத்தோருவர் திருவிழா!

த:- தாங்கள் சொல்வது விளங்கவில்லையே.

ப. ப:- உங்களுக்கு விளங்காது தான். நீங்கள் தர்மகர்த்தராகஇருக்கும் வரையில் திருவிழாவா நடக்கும். திருட்டு விழாத்தான் நடக்கும்!

த- ஏது இவ்வளவு கோபம். என்ன நடந்தது சொல்லுங்கள்.

ப. ப:- நடந்தது என்ன, அறுபத்துமூவர் விக்கிரகங்களில் இரண்டு விக்கிரகங்கள் "நடந்துவிட்டன"

த:- ஆ! இதென்ன அநியாயம், அக்ரமம்.

ப. ப:- அக்கிரமமா? உமக்கு அவமானம் இல்லையா?

த:- எப்படித் திருடு போய் விட்டது?

ப. ப:- பேஷ்! நன்றாக இருக்கிறது உங்கள் "தர்மகர்த்தாத்தனம்." என்னைக்கேட்ட கேள்வியை உங்கள் கோயில் குருக்களைக் கேளுங்கள்.

த:- நாகராசநம்பி குருக்களையா கேட்கவேண்டும்!

ப. ப:- ஏன் அவனைக்கேட்கப் பயமா? அவனை நாகராசநம்பி என்று இன்னொருமுறை அழைக்காதீர்கள். நாசகாரநம்பி என்று சொல்லவும்.

த:- ஏன், குருக்கள் இந்தத் திருட்டில் சம்பந்தப்பட்டிருக்கிறாரா?

ப. ப:- சம்பந்தம் என்ன! அப்பணியைச் செய்தவன் அவனே!

த:- சிவ சிவா!

ப. ப:- இதற்குப் பரிகாரம் ஒன்றும் கிடையாதா?

த:- இந்த அக்கிரமத்தை யார் விசாரிப்பது. நமது அரசர் கிருஷ்ண தேவராயர் வரையில் குருக்களுக்கு செல்வாக்கு உண்டே!

ப. ப:- நானே நேரில் சென்று கிருஷ்ண தேவராயரிடம் சொல்லிக் கோயில் நிலையைத் திருத்துவதற்கு ஆவன செய்யட்டுமா?

த:- திருவாரூரிலிருந்து விஜயநகரம் செல்வதென்றால் சுலபமா? தூரமோ அதிகம். அப்படிச் சென்றாலும் உங்களுக்கு ராயர் பேட்டி கிடைக்குமா? ராயரின் வாயிற்காவலன்கூடக் குருக்களின் ஆளாயிற்றே.

ப. ப:- இல்லை, எந்தக் கஷ்டத்தையும் பாராது விஜயநகரம் சென்று பார்க்கிறேன்.

த:- உங்கள் முயற்சி வெல்க.

காட்சி 5.

இடம்:— விஜயநகரம், ராயர் அரண்மனை.
காலம்:— காலை.
உறுப்பினர்:— பணக்கார பக்தர். வாயிற்காவலன்.

ப. ப:- அப்பா, கிருஷ்ண தேவராயரைப் பேட்டி காணவேண்டும்.

வா. கா:- சுவாமி! ராயரைப்பேட்டி காண்பது எளிதல்லவே.

ப. ப:- ஒரு முக்கியமான விஷயமா அவரைப் பார்க்கணும். பூசாரி நீ வரம் கொடுத்தால் போதுமப்பா.

வா. கா:- நானே ராயரின் வாயிற்காவலன். என்றால் என்ன முடியும் சாமி. ராயரோ இன்னும் ஒருமாதத்திற்குப் பேட்டிகாண வருபவர்கள் யாரையும் உள்ளே விடக்கூடாதென்றுஉத்தரவிட்டிருக்கிறார்.

ப. ப:- எந்த விதிக்கும் விலக்கு உண்டல்லவா?

வா. கா:- அது ராயரிடத்தில் கிடையாதே.

ப. ப:- அப்போ நான் ராயரைப் பார்க்கமுடியாதா? திருவாரூரிலிருந்து விஜயநகரத்திற்குக் கஷ்டப்பட்டு வந்ததுதான் மிச்சமா!

வா. கா:- நான் என்ன செய்யட்டும். ஆனால் ராயர் ஸ்தல யாத்திரையாகத்தென்னாட்டுக்குப்போகப்போகிறாரென்று வதந்தியாக இருக்கிறது. அப்பொழுது அவர் திருவாரூருக்கும் சென்று அங்கே இரண்டு நாட்கள் தங்குவதாகத் தெரிகிறது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தாங்கள்ராயரைஅங்கேயே பேட்டி காணலாம்.

ப. ப:- சரி, இதையாவது சொன்னாயே. நான் போயிட்டு வர்ரேன்.

[தனது விஜயநகரத்து அனுபவமூலம் ராயர் திருவாரூருக்கு வந்தாலும் அவரை நேரானமுறையில் பேட்டிகாணமுடியாதென்பதைப் பக்தர்உணர்ந்துகொண்டார். அவருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. பக்தர் தன் வீட்டிலே ஒருகிளி வளர்த்து வந்தார். அந்தக்கிளியின்மூலம் தனது குறையை ராயரிடத்தில் தெரிவித்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்தார். ராயரைப்போல் ஒரு உருவச் சிலையை அமைத்தார். அந்தச் சிலையைப்பார்க்கும்போதெல்லாம் "கிருஷ்ண தேவராயர், கிருஷ்ண தேவராயர்" என்று சொல்லும்படி கிளியைப் பழக்கினார். கிளியும் இவ்விதம் பலநாள்பழகி ராயர்பெயரைத் தெளிவாக உச்சரிக்கக்கற்றுக்கொண்டது. பிறகு கிளிக்கு ஒரு பாட்டையும் சொல்லிக்கொடுத்தார். அதனையும் தெளிவாகச் சொல்லக் கிளி கற்றுக்கொண்டது. இப்படியாக கிளியையும் ராயர் சிலையையும் வைத்து பக்தர் தம்வீட்டில் ஒத்திகை நடத்தி வந்தார். சிலையைக் கண்டவுடனே கிளி ராயர் பெயரைச் சொல்லி அழைக்கும். பிறகு பாட்டையும் பாடும்.]

காட்சி 6

இடம்:- திருவாரூர் கொலு மண்டபம்
காலம்:- மாலை
உறுப்பினர்:- கிருஷ்ணதேவ ராயர் பணக்கார பக்தர் வாயிற்காவலன்

ப. ப:- அப்பா மண்டபத்தில் என்ன நடக்கின்றது.

வா. கா:- சுவாமி, ராயர் நியாய விசாரணை நடத்துகின்றார். அவரவர் தம்முடைய குறைகளைச் சொல்லுகின்றனர். ராயர், அவற்றிற்குத் தக்கபடி உத்தரவளிக்கிறார்.

ப. ப:- எனக்கும் குறையுண்டு, ராயரிடத்தில் செலலவிரும்புகிறேன்.

வா. கா:- சுவாமி, இன்று முதல் நாள், ராயரிடத்தில் தம்முடைய குறையைச் சொல்லப் போதிய அளவுக்கு மக்கள் சென்றுவிட்டனர். இனி யாரையும் விடக்கூடாதென்று எனக்கு உத்தரவு.

ப. ப:- உம், நான் எதிர்பார்த்தது தானே.

காட்சி 7.

இடம்:— திருவாரூர்.
காலம்:— காலை.
நிகழ்ச்சி:— ராயர் தம் பரிவாரங்களுடன் ஊர்வலம் வருகின்றார். ஊர்வலம் பல வீதிகளைக் கடந்து ஒரு வீதியிலே பக்தருடைய வீட்டின் முன் வந்துபோய்க் கொண்டிருக்கிறது. பக்தரின் கிளி யானைமேல் வந்த ராயரைப் பார்த்து விடுகிறது.

கிளி:- "கிருஷ்ண தேவராயா" "கிருஷ்ண தேவராயா" (கூப்பிட்

பின் தனக்குத் தெரிந்த பாட்டையும் பாடிற்று.)

ராயர்:- நில்லுங்கள். (ஒரு வீரனை அழைத்து) அந்தக் கிளியைக் கொண்டு வா.

வீரன்:- அரசே, இதோ அந்தக் கிளி.

கிளி:- "கிருஷ்ண தேவராயா" "கிருஷ்ண தேவராயா" (பாட்டையும் பாடிற்று.)

ராயர்:- (சிரித்துவிட்டு) இக்கிளியின் விவரம் இங்குள்ளவர் யாருக்காவது தெரியுமா?

[மௌனம். ஒருவருக்கும் விவரம் தெரியவில்லை.]

ராயர்:- சரி. கிளியையும் அதற்கு உரியவரையும் கொண்டு போய்க் காவலில் வை. மாலையில் கொலு மண்டபத்தில் விசாரிப்போம்.

காட்சி 8

இடம்:— திருவாரூர்கொலுமண்டபம்

காலம்: — மாலை.

உறுப்பினர்: — கிருஷ்ண தேவராயர்.
பணக்கார பக்தர்.
கிளி.
மந்திரிகள்.
நகரப் பிரமுகர்கள்.
நாகராச நம்பி குருக்கள்.

ராயர்:- கிளியைக் கொண்டு வா. (பக்தரைப் பார்த்து) கிளி உம்முடையதுதானா.

ப. ப:- ஆம் அரசே.

ராயர்:- அதனைப் பழக்கியது யார்?

ப. ப:- அடியேன்தான் அரசே.

ராயர்:- அது ஒரு பாட்டுப் பாடிற்றே. அது என்ன பாட்டு?

ப. ப:- அது இந்த ஊர் வரலாற்றைச் சித்தரிக்கின்றது.

ராயர்:- பாட்டில் நமது பெயர் வரக் காரணம்?

ப. ப:- தாங்கள் கட்டளையிட்டால் சொல்லுகிறேன்.

ராயர்:- சரி, சொல்லும்.

ப. ப:- மூன்நாள் அறுபத்து
மூவர் இருந்தார்; அவரில்
இந்நாள் இரண்டு பேர்
ஏகினர்; கன்னன்
நறுக்குகின்றான்; விற்றுவிட்ட
நாகராச நம்பி
இருக்கின்றான், கிருஷ்ணராய!

ராயர்:- மற்றொரு முறை தெளிவாக இசையுடன் பாடவும்.

[பக்தர் இசை பயின்றவர் ஆதலின் பாட்டை இரண்டாம் முறை அழகாகப் பாடினார். ராயர் இசையில் ஈடுபட்டுச் சிறிது நேரம் பேசாதிருந்தார். தமிழ்ப் பாட்டு அவ்வளவாக அவருக்கு விளங்கவில்லை. ஆயினும் பாட்டின் இறுதியிலே தம்முடைய பெயர் வருவது மட்டும் அவருக்குத் தெரிந்தது. பாட்டின் பொருளை அறிய ஆவலுற்றார்]

ராயர்:- ஐயா, இந்தப் பாட்டின் அர்த்தம் என்ன? விளக்கமாகச் சொல்லவும்.

ப. ப:- அரசே, திருவாரூர் சிவாலயத்தின் பெருமை தாங்கள் அறிந்ததே. அடியேன் சிவத்தொண்டில் வாழ்நாளைக் கழிப்பவன். அடியேனது கைங்கரியம் ஆலயத்திற்கு ஏதேனும் இருக்கட்டும் என்று எண்ணி ஆலயத்திலுள்ள எல்லா மூர்த்திகளுக்கும், மற்றும் அறுபத்து மூவர் விக்கிரகங்களுக்கும் புத்தாடை அணிவித்துப் பார்க்க வேண்டுமென்று விரும்பினேன். கோயில் தர்மகர்த்தரும் இந்த நாகராச நம்பி குருக்களும் இதற்கு இணங்கினர். அறுபத்துமூவர் விழாவன்று இதனைச் செய்ய ஏற்பாடாயிற்று. அறுபத்துமூவர் விக்கிரகங்களுக்கென்று என்னிடத்தில் இருந்த அறுபத்து மூன்று ஆடைகளில் கடைசியில் இரண்டு ஆடைகள் மீதியாக நின்றுவிட்டன. அறுபத்து மூவர் விக்கிரகங்களை எண்ணிப் பார்த்தேன். அவற்றில் இரண்டு விக்கிரகங்களைக் காணோம். அந்த இரண்டு விக்கிரகங்களையும் இந்த நாகராச நம்பி குருக்கள் திருடி இதோ இருக்கும் கன்னனுக்கு விற்றுவிட்டார். கன்னன் அந்த விக்கிரகங்களை உருக்கிவிட்டதை நான் நேரில் பார்த்தேன். விக்கிரகங்களைத் திருடி விற்றுவிட்ட குருக்கள் எவ்வித தண்டனையும் பெறாமல் இருப்பதுமட்டுமல்லாமல், இந்த அவையிலே அலங்காரகாக அதோ அமர்ந்திருக்கிறார் பாருங்கள்.

[பக்தரின் பேச்சைக் கேட்டதும் ராஜ சபையிலே இருந்த அனைவரும் ராயரையும், பக்தரையும் குருக்களையும் மாறி மாறிப் பார்த்தனர். ராயர் கோபமே வடிவானார். சபையிலுள்ளோர் யாவரும் அஞ்சினர். சபையிலே பக்தரையும் கிளியையும் பார்த்த உடனேயே குருக்களுக்குப் பாதிஉயிர் போய்விட்டது. பக்தரின் பேச்சைக் கேட்டதும் மற்றப் பாதி உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. மறுக்கவும் முடியாது. தப்பவும் வழியில்லை]

நா, கு:- (ராயர் காலில் விழுந்து) என் பிழையைப் பொறுத்தருளவேண்டும். எனது சிறு மதியே என்னை இக்கதிக்காளாக்கியது. நான் இன்றுவரை கயவன், இன்று முதல் வேறு மனிதனாகிவிட்டேன். என்பால் கருணை காட்டுக.

ராயர்:- கயவனுக்குக் கருணையா? இந்த அக்கிரமத்தைச் செய்த நீ எதைச் செய்யத் துணியமாட்டாய்?

நா. கு:- அரசே, ஆண்டவன் மீது ஆணை! இனித்திருந்திவிட்டேன். பக்தர் என் கண்களைத் திறந்துவிட்டார். அறிவுபெற்றேன். அருள் புரிய வேண்டும்.

ராயர்:- கசடனே! நீ இனி என் நாட்டின் எல்லைக்குள் இருக்கக் கூடாது. ஓடிப்போ.

★

மடாலய மான்மியம்!

ஞானனந்தர்:— மாதரிடம் ஆசை கூடாதென்று மகான்கள் உரைத்துள்ளனரே, யோகானந்தரே! நீர் அந்த மங்கையைத் தேடிக்கொண்டு, மதிற்சுவரைத் தாண்டி, மலர்க் குழியில் வீழ்ந்ததாகக் கேள்விப்பட்டேன் — மனவேதனை அடைந்தேன். மறை கற்றவரே! நீரோ, இதுபோல் செய்வது!

யோகானந்தர்:— ஞானனந்தரே! என்னை வீணாக நிந்திக்காதீர். நீர் அடுத்த வீதி அகிலாண்டத்தை என்று ஆசைநாயகியாகக் கொண்டீரோ, அன்றே, அடியேனும் பரத்தைவிட இகத்திலே இயல்பாகவே அதிக இச்சை கொள்ளலானேன்.

ஞானு:— யோகானந்தரே! நம்மிருவர் விஷயம் கிடக்கட்டும். இது என்ன பிரமாதம்! குருநாதருக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதம்...... ஆஹா!......அருமையான யோகம்!

யோகா:— அரன் அருள் அவருக்கு அதிகமாகத்தானே இருந்தாக வேண்டும்!

இலக்கியம்

★ வள்ளுவர் தோற்றம் ★

11-3-49-வெள்ளிக்கிழமையன்று சென்னை, பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தமிழ் மாணவர் கழகத்தார் நடத்திய திருவள்ளுவர் விழாவிற்குத் தலைமைவகித்தபோது தோழர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

"இன்று, திருவள்ளுவர் திருநாள் நாட்டின் பல பகுதிகளிலும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கொண்டாடப்படும் நாளாகிவிட்டது—என்றாலும் பொதுமக்கள் இன்னும் வள்ளுவரை உணர்ந்து கொள்ளவில்லை.

திருக்குறள்—திருவள்ளுவர் – இந்தப் பெயர்களே கூடச் சில ஆண்டுகளுக்கு முன் மாணவர்களிடையே வழங்கப்படவில்லை. கம்பரும்—இராமாயணமும் பொதுமக்களிடையே செல்வாக்குப் பெற்ற அளவு, சேக்கிழாரும் பெரிய புராணமும் மக்களிடையே பரப்பப்பட்ட அளவு—வள்ளுவர் புகழோ—குறள் நெறியோ மக்களிடை பரப்பப்படவில்லை. பரப்பவேண்டிய பணியைச் செய்திருக்க வேண்டிய புலவர்கள் அந்தப் பணியைச் செய்யவில்லை; மற்றவர்கள் செய்யும் அளவுக்குச் சிந்திப்பதற்கும் இடந்தராமல் புராணப் பிரசங்கம் நிகழ்த்தி இருக்கிறார்கள்.

உண்மையில், இந்தப் பள்ளியில் இவ்விழாவைச் சிறப்பாக நடத்த முன் வந்தது பற்றி நான் களிப்படைகிறேன். பலப்பல பள்ளிகளில், தலைமை ஆசிரியருக்குத் திருக்குறள் தெரியாததனாலோ, தெரிந்திருந்தும் அது தம் குலத்தைக் கெடுத்துவிடும் என்று கொண்டுள்ள அச்சத்தாலோ, அல்லது வேறு எந்த உள் எண்ணத்தாலோ, திருவள்ளுவர் விழாநடத்த அனுமதிப்பதில்லை. திருக்குறட் சொற்பொழிவுகள் நடத்த எவரேனும் முன் வந்தாலோ—அவர்களுக்கு இடையூறு செய்யாமலோ—தொல்லை தராமலோ இருந்ததில்லை. புலவர்கள் முன்வந்தபோதும் இப்படித்தான் கல்வித்துறை இடந்தராமல் இருந்துவந்தது. இந்நிலையில் இன்று பள்ளிகளில் திருக்குறள் விழா எவரும் தடுக்க—நிறுத்த முடியாத அளவில் நடைபெறுவதற்குக் காரணமாகக் கட்டளை பிறப்பித்த கல்வி அமைச்சரை—வேறு ஒரு காரணத்துக்காகவும் பாராட்ட வழியில்லை எனினும், இந்த ஒன்றுக்காவது மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டு வாழ்ந்த திருவள்ளுவரைக் குறித்து இன்று பலப்பல செய்திகள் வழங்குகின்றன. ஆராய்ச்சிகள் ஒருபுறம் நடைபெற்ற போதிலும், வள்ளுவரைப் பற்றிய கற்பனைக் கதைகளே மக்களிடம் அதிகம் வழங்குகின்றன.

திருவள்ளுவர், வாசுகி என்றொரு அம்மையாரை மணந்துகொண்டு, வாழ்ந்தார் என்றும், அந்தக் கற்புக்கரசியார்—கிணற்றிலே நீர் எடுத்துக் கொண்டு இருந்தபோது அவர் கூப்பிட அப்படியே கயிற்றை விட்டு விட்டு ஓடிவர, அக்கயிறும் அப்படியே இறங்காமல் நின்றதாகவும், அவர்—பழைய சோற்றை ஆறச் செய்ய விசிறி கேட்க—அம்மையார் அப்படியே விசிறிக்கொண்டு நின்றதாகவும்—இன்னும் பலவும் பேசப்படுகின்றன!

இனி வள்ளுவரது பிறப்பைக் குறித்தும் பல கதைகள் பேசப்படுகின்றன. அவரது, முதற்குறளில் 'ஆதிபகவன்' என்று வருவதைக் கொண்டே — அதற்குப் பேராசிரியர் ச. சோ. பாரதியார் போன்றவர்கள் நல்ல ஆராய்ச்சியுரைகள் வழங்கியுள்ளபோதிலும் – மக்கள் உண்மையை உணராமல் மயங்கும் அளவுக்கு ஆதியும் பகவனும் வள்ளுவரின் தாய் தந்தை என்றும் ஆதி—புலைச்சி என்றும், பகவன்—பார்ப்பனன் (பூதேவன் என்ற எண்ணத்தோடு) என்றும் கதைகட்டப்பட்டு வழங்கப்படுகிறது. ஆதி—தாயுமல்ல—பகவன் தந்தையுமல்ல, அதைவிட நிச்சயமாக—அவர்கள் கற்பித்துள்ளபடி புலைச்சியுமல்ல – பார்ப்பனனுமல்ல. அவர்கள் இரண்டுபேர் இருந்தார்களா இல்லையா என்பது ஒருபுறமிருக்க – வள்ளுவருடைய காலத்திலே—யார் புலைச்சி—யார் பார்ப்பனன் என்று தெளிவாகத் தெரிந்துகொள்ளும் அளவுக்கும் பேதம் இருந்திருக்கவே முடியாது என்பதோடு—அப்படிப்பட்ட இரு சொற்களின் பொருளுக்கேற்ற வாழ்க்கை இருந்தது என்று எவரேனும் கருதினாலும், அவர்களுடைய கதையிலே பேசப்படுவதுபோல, அவர்களுடைய காதல் வாழ்க்கை, பிறரால் கண்டிக்கப்படும்படியான கருத்துக்கள் தமிழர் வாழ்வில் அக்காலத்தில் இடம் பெறவேஇல்லை என்று உறுதியாகக் கூறலாம்.

வள்ளுவரும்—கபிலரும் – ஔவையும் நன்கறியப்பட்ட புலவர்களாவர். அதியமானும் ஒரு பெருவள்ளலாவன். அப்படிப்பட்டவர்களையெல்லாம்—வள்ளுவருக்கு உடன் பிறப்பாளராகக் கற்பிப்பதில் சிறிது மகிழ்ச்சி ஏற்படலாமெனினும், ஒரே காலத்தில் வாழாத இப்படிப்பட்ட பெரியோர்களையும் உடன்பிறந்தவர் என்பதை அவர்களோ வேறெந்தச் சங்ககாலப்புலவரோ ஓரிடத்தும் குறிப்பிட்டுக் கூறாதிருந்தும்—அதற்கு மிகமிகப் பிற்காலத்தினர்—இவ்வாறு உடன்பிறந்தோராகக்கூறியது—எவ்வளவு பெரிய தவறு என்று எண்ணிப்பாருங்கள்.

இல்லாத பெற்றோருக்கு, ஏழு குழந்தைகள் பிறந்ததாக எவரெவரையோ, இழுத்துவந்து நிறுத்தியது, எவ்வளவு ஆழ்ந்த நோக்கமில்லாமலிருக்கவேண்டும் என்பதும் சிந்திக்கற்குரியது.

இந்தக்கதையில் ஏதேனும் ஒன்றிரண்டு செய்தியாவது உண்மையாக இருக்கக்கூடுமா எவராலோ – அக்காலத்தில் 'சாதி' இருந்திருந்தால்தான் சிறிதேனும் உண்மையிருக்கலாம் என்று எண்ணக்கூடும். திருவள்ளுவர் இயற்றிய நூலில் எந்தவிடத்தும் சாதி என்ற சொல்லே இல்லை. சாதி—வடமொழி—எனவே தமிழில் அதற்கீடான சொல் வந்திருக்கலாமோ எனில் இல்லையென்றே கூறவேண்டும். பிறப்பு—குடி குலம்—என்ற சொற்கள் வந்துள்ளனவே எனில்—அவற்றுள் எதுவும் சாதியைக் குறிப்பன ஆகா என்பதைக் குறள் கற்றோர் உணர்வர்.

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 27-3-49 [காஞ்சி

வெள்ளி முளைக்கிறது!

சென்னை சர்க்கார் எதற்கெடுத்தாலும் எங்களிடம் பணம் இல்லையே! என்ன செய்வது? என்ற பல்லவியைத்தான் பக்கத்துணைக் கழைக்கிறது. ஒரு நாட்டை நல்ல முறையில் ஆள்வதற்குப் பணம் தேவை என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால், தேவையான செலவினங்களுக்குப் பணம் தேவைப்படும் போது, அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வரி போடுவது ஒன்றுதான் வழி என்ற முறையில் நடந்துகொள்ள முற்படும்போது தான், ஒரு சர்க்காருக்கும் அதன் எதிர்க் கட்சியினருக்கும் கருத்து வேறுபாடுகள் உண்டாகின்றன. மக்களுக்குத் தேவையான வசதிகளை ஒரு சர்க்கார் செய்துகொடுக்க முன் வரும்போது, அதற்கு மக்கள் ஆதரவளிப்பதையும், அவர்களாலான உதவியைச் செய்வதையும் எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

ஆனால், சர்க்கார் ஒரு காரியத்தைச் செய்ய முற்படும் போதும், அந்தக் காரியத்தைச் செய்து முடிப்பதற்குப் பணம் தேவை என்று கூறும்போதும், சர்க்காரால் செய்யப்பட இருக்கும் அந்தக் காரியம் மக்களுக்குத் தேவையா? அதனால் பலன் உண்டாகுமா? அதற்காகப் பணம் செலவிடலாமா? என்பனவற்றை முதலில் அந்தச் சர்க்கார் யோசிக்கவேண்டும். அங்ஙனமன்றிச், சர்க்கார் சரி என்று நினைக்கும் காரியங்களை எல்லாம் மக்களும் சரி என்று நினைப்பர் - ஒத்துக்கொள்வர் -- ஆதரிப்பர் என்று கருதுவதும், அதற்கேற்பக் காரியங்களை நடத்திச் செல்வதும் மக்களாட்சி முறைக்குப் புறம்பான ஏகாதிபத்யக் கொடுங்கோலாட்சி முறையாகும். மக்கள், தங்களுக்கு நல்லது-தேவை என்று விரும்பும் காரியங்களைச் செய்யும் சர்க்காருக்கே மக்கள் சர்க்கார் என்று பெயர்.

மக்களின் ஆதரவால் மன்றமேறி மன்பதையை ஆள்பவர்கள், மக்களின் விருப்பத்தை அறிந்து, அதன் படி நடக்க முடியவில்லை யென்றாலும், அவர்களின் தேவைகளை உணர்ந்து அதற்கேற்றபடியாவது நடக்க முயலவேண்டும்.

சென்னை மாகாணத்தில், படிக்கக் கூடிய பருவத்திலுள்ள பிள்ளைகள் எழுபது இலட்சம். ஆனால் இப்போது பள்ளிக்கூடத்துக்குச் செல்பவர்கள் முப்பத்தெட்டு இலட்சம் தான். இன்னும் முப்பத்திரண்டு இலட்சம் பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பிப் படிக்கச் செய்யவேண்டும். இது, நாடாள வந்தவர்கள் நாட்டுக்குச் செய்ய வேண்டிய தேவையான காரியங்களில் முதன்மையானதாகும். இதற்குச் சர்க்கார் பணம் செலவிட்டால், அதனைத் தவறு என்று எந்த மட்டாகப் பேர்வழியும் கூறமாட்டான். ஆனால், மக்களின் தேவைக்குப் புறம்பான துறைகளில் இறங்கி, அவற்றிற்காக மக்களின் பணத்தை வாரியிறைக்கும் போதும், அதற்காக வரிகளை உண்டாக்கும்போதும்தான் சர்க்காரைக் கண்டிக்கவும் குறை கூறவுமான நிலை ஏற்படுகிறது.

மக்களின் தேவை-விருப்பம் என்ற இரண்டிற்கும் உள்ளவேறுபாட்டையும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் உணராத எந்தச் சர்க்காரும், தனக்குக் கிடைத்துள்ள அதிகாரம் ஒன்றை மட்டும் துணைக்குவைத்துக்கொண்டு காரியங்களைச் செய்ய முனையக் கூடாது. அங்ஙனம் செய்தால் நல்லாட்சி நலியும்-மக்களாட்சி மங்கும்-மமதை ஆட்சி மன்றமேறும். அப்போது மக்களின் பரிவும் பாசமும் அந்த ஆட்சிக்கு ஏற்படாது.

எடுத்துக் காட்டாகத், தென்னாட்டவர் வடநாட்டு மொழியான இந்தியைப் படிக்கவேண்டுமென்று கூறுவது, தேவை -- விருப்பம் என்ற இரண்டில் எது அதற்கு ஏற்புடையது என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். இங்குள்ள மக்களுக்கு இந்தி படிக்க விருப்பமுண்டா என்பதையும், அது இன்றியமையாத தேவைகளில் ஒன்றுதானா என்பதையும், இம்மாகாணத்திலுள்ள பிள்ளைகளில் முப்பத்திரண்டு இலட்சம் பிள்ளைகள் தங்களுக்கு இன்றியமையாத ஆரம்பப்படிப்பான தாய்மொழிக் கல்வியைப் படிக்கமுடியாத நிலைமையில், அதற்கான ஏற்பாடு எதுவும் செய்யாமல், இந்தி என்னும் அயல் மொழியைக் கற்கச் சொல்வது முறையா என்பதையும், அதற்காகப்பணம் செலவிடுவதுநேர்மையா என்பதையும் மக்கள் பெயர் கூறி, அவர்களின் ஆதரவைப் பெற்று ஆளவந்தவர்கள் நடு நின்று எண்ணிப்பார்க்க வேண்டும். தாய் தந்தையில் பிச்சையெடுக்கும்போது தனயன் கும்பகோணத்தில் கோதானம் செய்வது போல், தாய்மொழியில் ஆரம்பக்கல்வி கூடக் கற்பிக்க முடியாமல் முப்பத்திரண்டுஇலட்சம் குழந்தைகளைக் குப்பைமேட்டில் தவழவிட்டு விட்டு, வடநாட்டு இந்தியைப் படியுங்கள்-கட்டாயமாகப் படியுங்கள் - இல்லையேல் 'நம்ம கதி அதோகதிதான்' என்று கூறுவதும், அதற்காகப் பணம் செலவிடுவதும் எந்த முறையில் நேர்மையானது என்று கேட்கிறோம்.

தாய்மொழிக் கல்வி, அதிலும் ஆரம்பக் கல்வி முதலில் தேவையா? அல்லது வேற்றுமொழிக் கல்வி தேவையா? என்பதனை எண்ணிப் பார்க்கவேண்டாமா? படிப்பு, உத்தியோகம் கிடைக்கும் என்ற குறிக்கோளுடன் அமையக்கூடாது, அறிவைப் பெறும் நோக்கத்துடனேயே அமைய வேண்டும் என்று அறிவுரை கூறும் அமைச்சர்கள், உத்யோகத்திற்காக இந்தியைப் படியுங்கள்-இல்லையேல் உத்யோகம் கிடையாது என்று ஏன் மிரட்டுகிறார்கள்?

அண்மையில், நமது முதலமைச்சர்,

> "இந்தி கற்றவர்களுக்குத்தான் உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்று சட்டம் செய்வதாகச் சர்க்கார் உத்தேசித்திருக்கிறது"

என்று பேசியிருக்கிறாரே! இதன் பொருள் என்ன? முன்னர், உத்யோகத்திற்கு ஆங்கிலம் தேவைப்பட்டது -இப்போது உத்தியோகத்திற்கு இந்தி தேவைப்படுகிறது-என்றால், நம் தாய்மொழி எதற்கு-எப்போது தேவைப்படும் என்பது தெரியவில்லையே!-இல்லை-தெரிகிறது. யாருக்கு? நமக்கு. ஆனால்ஆளவந்தார்களுக்குத் தெரியவில்லை-தெரிந்து கொள்ளும் தெளிவு இன்னும் பிறக்கவில்லை. அன்று ஆங்கிலம் நம்மை ஆண்டது. இன்று இந்தி நம்மை ஆளுகிறது.

இனிமேல்தான் தமிழ் நம்மை ஆளப்போகிறது என்ற உண்மையை இன்னும் ஆள்வந்தார்கள் உணரவில்லை. ஆனால் உணருங்காலம் நெருங்கி வருகிறது என்ற நம்பிக்கை மட்டும் நமக்கிருக்கிறது. 'இந்தி படிக்காவிட்டால் நம்முடைய கதி அதோகதிதான்' என்று கூறியவர்களே, இன்னும் சில காலம் பொறுத்து, "இந்தி படித்ததால் நம்முடைய கதி அதோகதியாகிவிட்டது" என்று கூறிக்குமிறி வேதனைப்படும் நிலைமை ஏற்படப்போகிறதென்பதில் நமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது. அந்த அறிகுறிகள் இப்பவே தென்படத்தொடங்கிவிட்டன. சாவடியிலிருந்து சட்டசபைவரையிலே அந்த அறிகுறிகள் தென்படுவதைக் காண்கிறோம். டில்லி சென்னையைப் பொருளாதாரத் துறையில் ஆட்டிப்படைக்கிறவரையில் நம்மால் எந்த நல்லகாரியத்தையும் செய்ய முடியாது என்று அமைச்சர்களே முணுமுணுக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது — இந்த முணுமுணுப்பு முச்சந்திக்கு வரும் என்பது நமக்குத் தெரியும். அப்போது தான் நாம் அவர்கள் கண்களில் காணப்படுவோம்.

அந்தச்சமயத்தில், இன்று,

"இந்தி கற்றால்தான் வடநாட்டாருடன் வியாபாரம் செய்ய நம்மால் முடியும்"

என்று கூறும் முதலமைச்சரே தம்முடைய வாயாலேயே,

"தமிழ் கற்றுக்கொண்டு வந்தால் தான் இனி வடநாட்டவர் நம்முடன் வியாபாரம் செய்ய முடியும்"

என்று கூறும் நிலை ஏற்படும். அது மட்டுமல்ல,

"தமிழ்நாடு தனியாக நிற்க முடியுமானால்தான் நாம் இந்தியைப்புறக்கணிக்க முடியும்"

என்று, இன்று கூறும் முதலமைச்சரே இன்னும் சிலகாலம் பொறுத்து,

"தமிழ்நாடு தனியாக நிற்கமுடியும், அதற்கு யாருடைய தயவும் தேவையில்லை"

என்று கூறப்போகிறார். அவர் கூறாவிட்டாலும் — கூறவிரும்பாவிட்டாலும், நாடு அவரைக்கூறும்படி செய்யும். அதன்பின்னர் தமிழ்நாடுமட்டும் தனித்து நிற்கமுடியாதென்ற உண்மையும், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகியமொழிகளைக்கொண்ட அனைவரும் ஒன்றாக நின்றுஅரசியலை நடத்தினால், எவருடைய தயவுமின்றி நம்மால் நல்வாழ்வு நடத்த முடியும் என்ற உண்மையும் புலப்படும். பொருளாதாரத் துறையில் தென்னாடு வடநாட்டால் சுரண்டப்படும் கொடுமையை இப்பொழுதே உணரத் தொடங்கிய அமைச்சர்களுக்கு, இன்னும் சில காலம் போனால், தென்னாடு வடநாட்டின் தொடர்பை அறுத்துக்கொள்ள வேண்டியதே என்ற நிலை ஏற்படத்தான் போகிறது. அவ்விதம் ஏற்படுவதில் உள்ள சிக்கல்களையும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் தான் திராவிடர் கழகம் இப்போது விளக்கிக்கொண்டுவருகிறது. இந்த விளக்கம் இப்போது வேம்பாகத் தோன்றினாலும், நம்முடைய பிரசாரம் காலப்போக்கில் அதனை அவர்களுக்குக் கரும்பாக்கிவிடும்.

நம்மிடம் எவ்வளவு குரோதம் இருந்தபோதிலும், சென்னையிலுள்ள சௌகார்பேட்டை போன்ற மார்வாடி முகாம்களையும் அங்கு நடக்கும் வியாபார முறைகளையும் நமது அமைச்சர்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களில் சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களானால்,

"இவர்கள் எல்லாரும் வடநாட்டில் இருந்து இங்கு வியாபாரம் செய்ய வந்தபோது, இந்நாட்டு மொழியான தமிழைக் கற்றுக்கொண்டு வரவில்லையே! நாம் மட்டும் வடநாட்டாருடன் வியாபாரம் செய்யப் போவதாய் இருந்தால் ஏன் இந்தி மொழியைக் கற்றுக்கொண்டு போகவேண்டும்?"

என்ற எண்ணம் உண்டாகாமல் இருக்க முடியுமா?

இந்தியா ஒரு தேசம் — அதைப் பிரிக்க முடியாது—கூடாது என்றவர்களே அது இரண்டாகப் பிரிந்து இருப்பதைப் பார்க்கிறார்கள். இந்தியாவைப் பிரிப்பது பசுவை வெட்டுவது போலாகும் என்று கூறியவர்களே, இன்று 'இந்தியப் பசு' இரு கூறாக வெட்டப்பட்டு வெவ்வேறாக இருப்பதைப் பார்க்கிறார்கள்.

இப்போது நாம் திராவிட நாடு திராவிடருக்கே ஆகவேண்டும் என்று கூறுவதற்குக் கூறப்படும் கண்டனங்களையும் மறுப்புகளையும் விட அதிகமான அளவிலே, பாகிஸ்தான் பிரிவினைக் கிளர்ச்சியின்போது கண்டனங்களும் மறுப்புக்களும் கிளம்பின. பின்னர் அவையெல்லாம் பயனற்ற கூச்சல் என்பதை உணர்ந்து பிரிவினைக்குச் சம்மதித்தனர். இதே நிலைமை நம்முடைய நியாயமான கோரிக்கைக்கும் ஏற்படும் என்ற நம்பிக்கை நமக்கிருப்பதாலேயே நாம் நம்முடைய நோக்கத்தில் சிறிதளவும் விட்டுக் கொடுக்காமல் நடந்து வருகிறோம். பசுவையே வெட்டியான பிறகு அதன் வாலை வெட்டுவது பாபம் என்று கூறும் பக்தனைப் போல் நடந்து கொள்பவர்களின் போக்கைக் கண்டு பரிதாபமும் வேதனையும் அடைகிறோம்.

வடநாடு தென்னாட்டை ஆட்டிப் படைக்கிறது என்பதனை அமைச்சர்கள் உணர ஆரம்பித்துவிட்ட பின்னர், வடநாட்டுத் தொடர்பு தென்னாட்டிற்கு ஏன் என்ற கேள்வியும், தென்னாடு வடநாட்டிலிருந்துபிரிந்து நிற்கமுடியும் என்ற பதிலும் கிளம்பாமல் இருக்க முடியாது. விடிவெள்ளி முளைத்துவிட்டது; பொழுது விடிவதற்கு இன்னும் சில நாழிகையே இருக்கிறது.

வடநாட்டுத் தொடர்பாகிய இருட்டில்இருப்பவர்களுக்கு, அந்த இருட்டில் இருந்துகொண்டு செய்யும் காரியங்கள் தெளிவாகவும், பயனுள்ளதாகவும் செய்யமுடியாமல் இருக்கிறதே என்ற கவலை பிறந்துவிட்டது. இந்தக் கவலையைப் போக்குவதற்கான மருந்து எங்கே கிடைக்கும் என்று தேடும் கட்டத்துக்கு வந்துவிட்டார்கள். அதற்கு முதற் சிகிச்சையாக [First Aid] இந்தி என்றநச்சுணவை உட்கொள்ளாமல் இருக்கவேண்டும். இந்த நச்சுணவை நீக்கியபின்னர், நமது தாய் மொழியே நமது வாழ்க்கைக்குவழிகோலும் என்பதைஉணர வேண்டும். அதன்பின்னர் வாழ்க்கையின் குறிக்கோளை அடைவதற்கு நம்முடைய நாட்டை நாமே ஆள வேண்டும் என்பதை உணரவேண்டும். இவை உணரப்பட்டுவிட்டால், அதன் முடிவு திராவிட நாடு திராவிடருக்கே என்பதைத் தவிர வேறு எந்த விதமாகவும் இருக்க முடியாது என்பதை ஆளவந்தார்கள் உணர வேண்டுகிறோம் — உணரும் நிலை ஏற்பட்டே தீரும்.

இன்பபுரியை நோக்கி

[பாரதி]

இவ்வுலகத்திலே தோன்றிய இன்னல்களைத் துடைப்பதற்காக எல்லாம்வல்ல கடவுள் அவ்வப்போது அவதாரம் செய்வார், லீலைகள் புரிவார், அருள் பாலிப்பார் என்று கூறுவர் மெய்ஞ்ஞானிகள். அது அந்தக் காலம். ஆனால், இன்று உலகத்திலே நிலைத்துள்ள துயரங்களை, ஒளியின் மத்தியிலே இருள், வளமையின் மத்தியிலே வறுமை, விஞ்ஞானத்தின் மத்தியிலே மெய்ஞ்ஞானம், பகுத்தறிவின் மத்தியிலே மூடபக்தி, இவை போன்ற பல்வேறு இன்னல்களைத் துடைத்தெறிவதற்காகப் பல, கலைஞர்கள் நாட்டில் தோன்றியுள்ளார்கள். இவர்களுள் விஞ்ஞானியும், கவிஞனும் முக்கியமானவர்கள். இவ்விருவரும் தமக்கென்று ஒரு கணப்பொழுதும் வாழவில்லை. வாழ்ந்திருந்தால் இன்று நாம் அவர்களைப் பற்றி அறிந்திருக்கமாட்டோம்.

வாழ்வு முழுதும் பிறர்க்கென வாழ்ந்த அம்மாவீரர்கள் ஓய்வு ஒழிவின்றி உழைத்தார்கள். இரவு பகலென்று பாராமல் எண்ணத்தைச் செலவிட்டார்கள். அவர்களின் கண்முன், வேலையின் கடினத்தால் வேதனைப்படும் மனிதன், உணவுக்காக மண்ணை உழுவதற்கு மாக்கலப்பையை நம்பியிருக்கும் மனிதன், உடைக்காக ஓய்வின்றித் தக்ளி சுற்றும் மனிதன், கால்கள்சோரக் கடும் வெயிலில் நடக்கும் மனிதன், கை வண்டியை இழுத்து மெய்சோரும் மனிதன், கண்டதையெல்லாம் அஞ்சும் காட்டுமிராண்டி மனிதன், சாதி மதம், பிடித்தலையும் சத்தற்ற மனிதன், வறுமையால் வதைக்கப்படும் மனிதன், இவர்கள், தோன்றித் தோன்றி முறையிட்டனர். இவர்கள் துயரைத்தீர்க்க இருவரும் கங்கணம் கட்டிக்கொண்டு முயன்றார்கள். அதன்பயன் ஒருவன் இயந்திரம்உருவாக்கினான். மற்றவன் கவிதை யூற்றைத்திறந்துவிட்டு, அறிவுச் சுடர் ஏற்றினான்.

சமுதாயத்தின் மத்தியிலேபிறந்து சமுதாயத்துக்காகவே வாழ்ந்தஇவர்கள் சமுதாயத்தின் கருவூலங்கள். மனிதசாதியின் கண்ணாகவும், காதாகவும், கையாகவும், வாயாகவும் இருந்து காரியமாற்றிய சித்தர்கள். அவர்கள் கண்ட அரியசாதனைகள் மக்கள் குலம் முழுமைக்கும் பொதுவுடைமையாயிருக்க வேண்டும். ஆம்! மக்கள் துயரைப்போக்க அவை பயன்படவேண்டும். பயன்படும் என்று நம்பித்தான் அவர்கள் உயிர்விட்டனர்.

ஆனால், காலத்தின் கோலம்! கவிஞனின் கவிதைகளும், விஞ்ஞானியின் இயந்திரங்களும், நாளடைவில் சுயநலக்காரரின் சுரண்டலுக்கும்,சூதுக்காரரின் ஏமாற்றுதலுக்கும் கருவிகளாகிவிட்டன. எதிர்பார்த்தபடி ஏழைகளின் வேதனை தீரவில்லை. அது இன்னும் அதிகமாயிற்று, ஏமாற்றத்தோடுங்கூட.

ஆகவே இயந்திரமும் கவிதையும் நாட்டின் பொதுவுடைமையாகவேண்டும் என்று அறிஞர்கள் பலகாலம் கூறி வருகின்றனர். நம்நாட்டு அரசாங்கத்தார் அவ்வழியில் தீவிரமாய் இறங்க ஏனோ அஞ்சுகின்றனர்.

ஆனாலும், அண்மையில், தேசியக் கவிச்சக்கரவர்த்தி எனப்பேர் பெற்ற பாரதியாரின் கவிதைத் தொகுதிகளைத் தேசிய சொத்தாக ஆக்கிவிட்டனர் என்று அறிகிறோம். அதற்காக நாம் அவர்களைப் பாராட்டாதிருக்க முடியாது.

பாமரமக்களின் பரிதாப நிலை கண்டு "நெஞ்சுபொறுக்குதில்லையே" என்று நெக்குருகப் பாடின பாவலர் களிலே பாரதியார் தலை சிறந்தவர். காரணம் அவர் ஏழைகளின் கவி. ஏழைக்கவி.

> "பாலடையும்நறுநெய்யும் தேனும்
> உண்டு பண்ணவர்போல் மக்க
> ளெல்லாம் பயிலும் நாட்டிலே"

அவர் பிறந்தார். ஆனால் பாலையும் தேனையும் அவர் பருக முடியவில்லை!

> "தன்னாலும் தேனும் கனியும் இன்
> பாலும் கதலியும் செந்நெலும்
> நல்கும்"

உன்னத நாட்டில்தான் அவர் உதித்தார். ஆனால், ஒருநாளும் வயிறார உண்டறியமாட்டார்.

"பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கும் நாட்டிலே" தான் பிறந்தார். ஆனால் அவர் பட்டினி கிடந்தபோது எந்த அறக்காப்பாளரும் ஏனென்று கேட்கவில்லை.

> 'இனியபொழில்கள் நெடிய
> வயல்கள் எண்ணரும்பெருநாடு"

தான் அவர்வாழ்ந்த இடம். ஆனால் அவருக்கு அவையெல்லாம் கற்பனையில் தோன்றிய கானல் நீர் போலாயின.

> "கனியும் கிழங்கும் தானியங்களும்
> கணக்கின்றித் தரும் நாட்டிலே"

தான் வறுமை என்னும் புலி வெடிவாய் முழக்கி அவரை வாட்டி வாட்டிப் பிழிந்தது.

> 'நாரதகானம் நலந்திகழ்நாட்டிலே"

அவதரித்த அவர் தமது சொந்தக் குழந்தைகள் கஞ்சியோ கஞ்சியென்று கதறிடும் கானத்தைத்தான் கேட்க முடிந்தது.

> "செல்வம் எத்தனை யுண்டோ-
> புவிமீது—அவை
> யாவும் படைத்த தமிழ் நாடு"

தான் அவர் பிறப்பிடம். ஆனால் செல்வம் அவரை வஞ்சித்தது. உப்புக்கும் புளிக்கும் அவர் பட்டபாடு உலகம் அறியும்.

வறுமை, பசி, பஞ்சம், பட்டினி, பிணி இவைதான் இந்த வளம் கொழிக்கும், வள்ளண்மை மிக்க, வண்மை நாடு அவருக்கீந்த வாடாத பரிசுகள். அவருக்கு மட்டுமென்ன! அன்றும், இன்றும் அவரைப் போன்ற கோடிக்கணக்கான ஏழைகளுக்குக் கிடைத்திருப்பதும அதுதானே! இந்த நிலை அவரது சிந்தனையைக் கிளறிவிட்டிருக்க வேண்டும். "எல்லாம் ஈசன் செயல்" என்று கைகட்டி வாளா இருந்திருக்க முடியாது அவர் போன்ற அறிஞர்கள்.

வளம் பொருந்திய நாட்டிலே பிறந்தும் தமிழர்கள் வாழ வகையின்றி மரக்கலமேறி அயல் நாடுகளுக்குச் சென்று மலைகளிலும், சுரங்கங்களிலும், காடுகளிலும் தோட்டங்களிலும் கண்ணீர் விட்டுக் கதறுவது ஏன்?

கடல் கடக்க முடியாமல் சொந்த நாட்டிலே தங்கியிருக்கும் துர்ப்பாக்கியத் தமிழர்கள் சோற்றுக்கு வழியின்றி எச்சில் இலைக்காக நாயுடன் போட்டி போடும் பிச்சைக்காரர்களாய்த் திரிவது ஏன்?

மனிதர் உணவை மனிதர்பறித்து மகராசர் உண்டு கொழுக்க உழைத்து உழைத்து உருக்குலைந்த ஏழைகள் கொதிப்பது ஏன்?

இத்தகைய எண்ணங்கள் அவர் நெஞ்சில் அலைமோதி யிருக்க வேண்டும். அந்த எண்ணத்தின்மீது பிறந்த ஏக்கத்தின் பெருமூச்சு அவர் பாடிய தேசியப் பாட்டுகள் ஒவ்வொன்றிலும், குறிப்பாக, நாட்டின் வளமையை வருணித்துப் பாடிய வரிகளிலெல்லாம், ஊடுருவிப் பாய்ந்து ஒலி பரப்புவதைக் காணலாம்.

'சொல்லக் கொதிக்குதடா
நெஞ்சம்—வெறும்
சோற்றுக்கோவந்ததிந்தப்பஞ்சம்''

என்ற பாட்டு அவரது ஏக்கத்தின் பிரதிபலிப்பு.

''மனிதர் உணவை மனிதர்பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி யுண்டோ?''

என்ற பாட்டு அந்த ஏக்கத்தினின்று பிறந்த எதிரொலி.

''இனி யொரு விதி செய்வோம்—
அதை
எந்த நாளும் காப்போம்.
தனி யொருவனுக்கு உணவில்லை
யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.''

என்ற பாட்டு அந்தக் குமுறலினின்று கொப்பளித்த கோபத்தின் கொக்கரிப்பு.

''இல்லையென்ற கொடுமை-உலகில்
இல்லையாக வைப்பேன்''

என்ற பாட்டு அந்தக் கோபத்தினின்று வடிவெடுத்த வைராக்யத்தின் கொடுமுடி.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை
செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை
செய்வோம்''

என்பது அந்த வைராக்கியம் வடித்தெடுத்த திட்டம்.

''இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
யந்திரங்கள் வடித்திடுவீரே''

என்ற பாட்டு அந்தத் திட்டம் பிறப்பிக்கும் கட்டளைகள்.

இங்ஙனம் பொருளாதாரத்தில் பொதுவுடைமை காண விரும்பிய அவர் சமூகத்தில்சாதிமத பேதமற்ற சமத்துவ சமுதாயத்தைச் சமைக்கவே விரும்பினார்.

''கோத்திரமோ பிரிவினைகள்—ஒரு
கோடியென்றால் அது பெரிதாமோ''

என்று தொடங்கிய ஏக்கம்,

''தகரென்று கொட்டு முரசே—
பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்''

என்று முரசு கொட்டி,

''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே'' என்று பறையொலி கிளப்பி,

''பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை'' என்று சங்கோசை முழக்கியது.

''ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று
தேடி
அலையும் அறிவிலிகாள்,
அறிவொன்றே தெய்வம்''

என்று பூத்த அறை கூவல்,

''தெய்வம் பல பல சொல்லிப்-பகைத்
தீயை வளர்க்கும் மூடர்களே''

என்ற எச்சரிக்கையாக விரிந்து,

''பலபித்த மதங்களிலே தடுமாறிப் பெருமை அழியும் உன்மதத்தரைக் கண்டு ''அன்பேமதம்'' என்று கூறும் அறிவுரையாக மலர்ந்து நின்றது.

பாரதியாரின் இன்பபுரியிலே சாதியில்லை. மதமில்லை. அன்பே மதம். அறிவே கடவுள். அங்கு,

வளமுண்டு வறுமையில்லை.
தொழிலுண்டு சுரண்டலில்லை
வேலையுண்டு வேதனையில்லை.
எழில் உண்டு ஏமாற்றமில்லை.
செல்வமுண்டு சிலரின் ஏக
போகமாக அல்ல.
கல்வியுண்டு கனதனவான்க
ளின் கைக் கருவியாக அல்ல.

அவரது எண்ணத்தின் சுருள்களிலே இதழ் விரித்த இன்பபுரியைக் காணுமுன் அவர் இறந்துபோனார். அவர் விட்டுச்சென்ற அரும்பெரும் பணியை இன்று தென்னாட்டிலே நம் தன்மான இயக்கம் செய்து வருகின்றது.

பாரதியின் மெய்யன்பர்கள், அவரை வழிபடும் பொருட்டு மணி மண்டபம் கட்டி, அவரை மண் பொம்மையாக்கி மாலையிட்டு மகிழ்கின்றனர். அதுவன்று நாம் செய்யும் வழிபாடு என விளங்கும்படி அவர் காணவிரும்பிய இன்பபுரியை இந்நாட்டில் அமைக்க வழி கோலுவதே நாம் அவருக்குச் செய்ய விரும்பும் திருப்பணி. அதுவரை நமக்கு ஓய்வில்லை நம் இயக்கத்துக்கு ஓழிவில்லை.

பாட்டுக்கொரு புலவன் பாரதி. அவன் பாட்டை இன்று நாட்டில் பொதுச் சொத்தாக்கிவிட்டனர் அரசாங்கத்தார். அவர்களின் நோக்கமும் அதுவாகவே இருக்கவேண்டுமென்பது நமது ஆசை. அதுவே இன்பபுரியை நோக்கிஎடுத்துவைத்த முதல் அடி என்று நாம் கருதுகிறோம்.

—※—

வள்ளுவர் தோற்றம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

'பிறப்பொக்கும்' என்ற குறளிலே வருகின்ற கருத்தும்—'சாதி' இருந்ததனாலே அதைக்கண்டிக்கத் தோன்றியதல்ல. 'சாதி' புகுத்தப்படுவதற்கு ஏற்ற விதத்திலே—மக்கள் செய்கின்ற தொழில்களிலே உள்ள வேறுபாடுகள் காரணமாக, ஒத்த பிறப்பினையுடைய மக்களிடையிலேயே, இழிவும் சிறப்பும் கருதப்படத் தொடங்கிய நிலையிலே—அந்த வேறுபாட்டைக் கண்டித்ததே அக்குறளாம். அக்குறள் 'சாதிப்பாகுபாடு தோன்றும் முன்பே அரும்பிய தொழில்வேறுபாட்டால விளைந்த உயர்வு தாழ்வைக்கண்டித்ததெனில், சாதி இருந்திருந்தால் தீண்டாமை தோன்றி இருந்தால், அவற்றைக் குறித்து அவர் வெளிப்படையாகக் கூறிக்கண்டித்திருக்கமாட்டாரா? சாதி ஒழிப்புக்கு ஒரு அதிகாரம்—இவற்றை உள்ளடக்கிய சாஸ்திர சம்பிரதாய ஒழிப்புக்கு மற்றோர் அதிகாரம் என வகுத்திருக்கமாட்டாரா? என்று எண்ணிப்பாருங்கள். எனவே அவரது பெற்றோரைக் குறித்துக் கூறப்படுவதை அறிவுடையோர் நம்பக்கூடுமா? கூறுங்கள்.

வள்ளுவர்—திருமயிலையிலே பிறந்தார் என்று பலரும்—இதனால்தான் அங்கொரு கோயில் உள்ளதாகவும்—மதுரைக்குப்பக்கத்திலே ஓர் ஊரில் பிறந்தார் என்று மற்றுஞ்சிலரும் கூறுவர். அது ஆராய்ச்சிக்கு உரியது என்றாலும் பொதுமக்களும் மாணவர்களும்-அவர்பிறந்தஊர்குறித்துக் கவலைப்படவேண்டுவதில்லை. அவர் பெயராலும் ஒரு கோயில் கட்டச் செய்தால்—இந்தக்காலத்து மக்கள் அவரை அதிகம் போற்றுவதால், நம் பிழைப்பு நன்றாக நடக்கும் என்று எண்ணுபவர்கள்தான் ஊரைப்பற்றிய விவாதத்தில் இறங்க வேண்டும். அவர்—தமிழ்நாட்டார் எல்லோருக்குமேயன்றி உலகத்தவர்க்கே

பொதுவாகிவிட்டபின்--அவர் தமிழர் என்பதொன்றே நம்மை மகிழ்விக்கப் போதும்.அவருக்கு-யாதும் ஊரே-யாவரும் கேளிர்.

அத்தகைய வள்ளுவரை இன்று ஊர்தேடி அலைந்து-நிலைநாட்டுவதை விட-உள்ளத்திலே நிலை நாட்டுவது இன்றியமையாதது-பயனுள்ளது. உள்ளத்திலே நிலை நாட்டுவதெனில்-தலையிலே சடாமுடியும், நெற்றியிலே திருநீறும், உடல் முழுதும் பட்டையும், கழுத்திலே கொட்டையும், மோவாயிலே தாடிமீசையும் மார்பிலே ஒருமாதிரியான முப்புரியுமாகக்காட்சியளிக்கும்-திருவள்ளுவரின் திவ்யசொரூபத்தையல்ல. அந்த வடிவம் வள்ளுவருடையது என்பதற்குப்போதிய சான்றில்லை. அவரது தோற்றமோ – பெருந்தன்மையோடுதான் இருக்கிறது. என்றாலும் —அவருக்கு உரியதாகச் செய்யப்பட்டுள்ள அணிகள்—அவருக்கு ஏற்புடைத்தானவை அல்ல. சீர்திருத்தவாதியாகத் தோன்றிய புத்தரை, பின்னர்—வைதீகர்கள் அவதாரமாகவே ஆக்கிக்கொண்டதைப்போலத்தான்- திருவள்ளுவருடையபிறப்பிலிருந்து—அவரது உருவம்வரையில் தம் மதத்துக்கு மாறுபட்டதாக இல்லாமற் செய்ய இந்தக் கதைகளையும் உருவத்தையும் கற்பித்திருக்க வேண்டும் என்று கருதுகிறேன். கல்லிலே செதுக்கியவடிவமும் உண்டே என்று எண்ணலாம் சிலர். அதன் காலம், வள்ளுவர் காலத்துக்கு மிகவும் பிற்பட்டதாகத்தான் இருக்க முடியும் என்பதையும்-அது உண்மையான வடிவமாக இருக்கும் என்று கருத இடமில்லை என்பதையும் மறந்துவிடவேண்டாம்.

அண்மையில் வாழ்ந்தவர்களைக் குறித்தே சரியான 'உருவம்' (படம்) கிடைக்கவில்லை. அதற்கு முன் வாழ்ந்த சிலபெரியோரது உருவமோ எனில் — நடுகல் வழக்கத்திற்குப் பின் சிலை வைக்கும் வழக்கமேற்பட்டதால் --- ஓரளவு அவரைப்போலச் செதுக்கப்பட்டு நிலை நாட்டப்பட்டு வந்துள்ளது. அது மட்டுமன்றி --- ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த கம்பரது உருவமே நமக்குத் தெரியவில்லை. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த இளங்கோவின் வடிவமும்நமக்குத்தெரியவில்லை. என்றாலும், அண்மையில் கம்பர் விழாக் கொண்டாட முற்பட்ட சிலர், கம்பர் எப்படி இருந்திருப்பார் என்று கற்பிக்க முற்பட்டு — கலாரசிகர் சிதம்பரநாதரை மனதிலே கொண்டு கம்பர் படம் தீட்டி வெளியிட்டிருந்தார்கள். அதேபோலத்தான் இளங்கோவுக்கு ஒரு வடிவம் தரத் தலைப்பட்டு - இந்நாளிலே மிகப் பெரியவராக விளங்கிய மகாத்மாவின் ஒளி முகமும் - அதிலே ஆச்சாரியாரது மூக்குமாகத் தீட்டி -- வெளியிட்டிருந்தார்கள். அதைப் போலத்தான் வள்ளுவரது உருவமும் கற்பிக்கப் பட்டிருக்க முடியும் என்பது என் எண்ணம்.

இல்லையெனில், -- மற்ற அடையாளங்கள் எப்படி இருப்பினும் -- "மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்துவிடின்" என்று தவஞ் செய்வார்க்கே அறிவுறுத்திய ஆண்டகை மேலேயும் வளர்த்து -- கீழேயும் நீட்டி முகத்தைக் காடாக்கிக் கொண்டிருப்பாரா என்று நீங்களே எண்ணிப் பாருங்கள்.

எனவே வள்ளுவரை - அவரது குறளைக் கொண்டு, கருத்துக்களைக் கொண்டுதான் மனதிலே நிலை நாட்ட முடியும். அவரது கருத்துக்கள் - நம்மைச் சிந்திக்க வைப்பன. மற்ற ஏடுகளோவெனில் -- நம்பினோர்க்குப் பலன் அளிக்கும்; நம்பாதவர்க்குப் பயன் இல்லை என்று அதை எழுதியவர்களாலேயே கூறப்பட்டிருக்கும். ஆனால் வள்ளுவர் நூலை யாரும் நம்பத் தேவையில்லை - வள்ளுவர் எழுதியது திருக்குறள் என்ற அளவிலே நம்பிக்கையை நிறுத்தி - அவர் கூறுவதைச் சிந்தித்துச் சரியென்று பட்டதை ஏற்றுக்கொண்டால் போதும். எனவேதான் - மக்கள் கருத்திலே மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கப் பாடுபடுபவர்களெல்லாம் இன்று குறளை - மக்கள் மன்றத்திலே இடம் பெறச் செய்திருக்கிறார்கள்.

அவரது நூலை—அவரைப் பற்றிய எந்தவிதமான எண்ணமும் இன்றிப் படிப்பதே பயன் விளைக்கும். அவர் சாதி இல்லாத காலத்தவர், சமயச் சழக்கு நிலைபெறாத காலத்தவர், மத மூடநம்பிக்கைகளிலே சிக்கிச் சீரழியாதவர், மக்களைமறந்து மகேஸ்வரனைக் குறித்த புராணம் பாடாதவர், வாழ்க்கையை மாயை என்று எண்ணி ஏமாறாதவர், 'எல்லாம் அவன் செயல்' என்று எண்ணி முயற்சியைக் கைவிடாதவர், விதி—விதி என்று மதியை இழந்துவிடாதவர்.

அத்தகைய ஒரு தனிப்பெரும் தமிழ்ப் புலவரை—தமிழர் விடிவெள்ளியை, பிரம்மாவின் அவதாரம் என்பதோ, ஸ்ரீவல்லபர் தான் திருவள்ளுவரானார் என்பதோ—வடமொழி அறநூல்களைப் பயின்று—அவற்றையே குறளாக இயற்றினார் என்பதோ—சூழ்ச்சிக்காரர்களின் சுயநல ஏமாற்றுகளாகும். அவைகளுக்கெல்லாம் இடம் தராமல், வள்ளுவரது நூலை விருப்புடன் பயின்று—அறிவுக்கு ஒத்துவரும் உண்மைகளை வாழ்க்கையிலே கடைப்பிடிப்பது தான்—வள்ளுவர் விழாவை நாம் கொண்டாடுவதின் பலனாகும், நாட்டிற்குச் செய்யும் நற்றொண்டாகும்."

வாழ்க வள்ளுவர் வழங்கிய வாழ்நெறி!

—*—

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் இப்போது வெளியாகும் பத்திரிகைகளின் தொகை எவ்வளவு என்பதை மொழிவாரி பிரித்து டில்லி சர்க்கார் வெளியிட்டிருக்கிறது.

ஆங்கிலம்	868	பத்திரிகைகள்
இந்தி	853	,,
உருது	571	,,
வங்காளி	369	,,
தமிழ்	305	,,
மராத்தி	243	,,
தெலுங்கு	151	,,
குசராத்தி	137	,,
பஞ்சாபி	81	,,
கன்னடம்	51	,,
உரியா	49	,,
மலையாளம்	23	,,
சிந்தி	8	,,
அசாமி	7	,,

இவையன்றி, சமஸ்கிருதம், யூத மொழி, போத்துகீசிய மொழி, லத்தீன், நேபாளி, அராபிக், சமாஸ்டி, கொகோனி முதலான மொழிகளில் சில பத்திரிகைகளும், இரண்டு மொழிகளோடு வெளியாகும் சில பத்திரிகைகளும் உள்ளனவாம்.

இலாபச் சுமை!

பெங்களூரில் உள்ள, இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில், 1947–48-ம் ஆண்டு, கிடைத்த இலாபம் 27,90,992 ரூபாய் என்று சர்க்கார் கணக்கிட்டிருக்கிறார்கள்.

அறுபத்துமூவர்—இரண்டு குறைய!

[சீர்த்தொண்டன்]

காட்சி 1

இடம்:- திருவாரூர்ச் சிவாலயம்
காலம்:- இரவு பத்துமணி
உறுப்பினர்:- நாகராசநம்பி குருக்கள் உதவிக் குருக்கள்.

நாகராச நம்பி குருக்கள் :— என்னங்காணும், கோயிலுக்குள் மனித வர்க்கத்தின் பூண்டுகூடக் கிடையாதே? சரிவரப் பார்த்துவிட்டீர்களா?

உதவிக் குருக்கள்:- நீங்கள் என்ன எனக்குச் சொல்லவேண்டுமா? நம்ம இருவரைத் தவிர வேறுயாரும்......

நா. கு:— நிச்சயமாகக் கிடையாதே சபாஷ்! உமது திறமைக்கு மெச்சினேன். நம் திருப்பணியை ஆரம்பிக்கலாமா?

உ. கு:- இன்று உமது திட்டம் என்னவோ?

நா. கு:- திட்டம் என்ன, திருப்பணி என்று சொல்லும் ஓய்.

உ. கு:— "திருட்டுப் பணி"யிலே "ட்டு" சிவலோக பதவியடைந்து விட்டது போலும்!

நா. கு:— கேலிக்கு இடமில்லேங்காணும். நம் பணியைத் துவக்கியாக வேண்டும். அதோ அந்த அறுபத்துமூவர் விக்கிரகங்கள் இருக்கும் அறைக்குச் செல்லும். இந்தாரும் அறையின் சாவி.

உ. கு:— சுவாமி, என்ன ஞாபக மறதியாகச் சொல்லுகிறீர்களா? நகைகள் இருக்கும் அறையா? அல்லது அறுபத்துமூவர் விக்கிரகங்கள் இருக்கும் அறையா?

நா. கு:— சிவத்தொண்டில் ஞாபக மறதியே எனக்குக் கிடையாதே. நான் முதலில் கூறியதுதான்.

உ. கு:— உண்மையாகவா? அங்கென்ன நமக்கு வேலே? விக்கிரகங்கள் அறுபத்துமூன்றும்இருக்கின்றனவா என்று எண்ணிப்பார்க்கவா?

நா. கு:- இல்லே, அவற்றில் இருவரை நாம் "தடுத்தாட்கொள்ள" வேண்டும்!

உ. கு:- ஆ! இதென்ன மாற்றம். நீங்கள் தனியாகக் கோயில் கட்ட உத்தேசித்திருக்கிறீர்களா?

நா. கு:- உமது மடைமையை என்னென்று சொல்லுவது! நாமா, கோயில் கட்டுபவர்கள்? கட்டின கோயிலுக்குக் காவலாளர்கள் அல்லவோ நாம்!

உ. கு:- பின்னர் எதற்குத்தான் இரண்டு விக்கிரகங்கள்?

நா. கு:- இக்கோயிலில் சிறைபட்டுக்கிடக்கும் அவைகளை சிறைக் கூடத்திலிருந்து விடுவிக்கத்தான்.

உ. கு:- தடவைக்கு இருவர் இருவராக அறுபத்து மூவரையும் விடுவிக்கத் திட்டமா!

நா. கு:- செச்சே, அம்மாதிரி ஒன்றும் முட்டாள் தனமான திட்டம் கிடையாது.

உ. கு:- என்ன சுவாமி, உயர்ந்த நகைகளை விட்டுவிட்டு பஞ்சலோகத் தாலாகிய விக்கிரகங்களை எடுக்கச் சொல்கிறீரே!

நா. கு:- இது தான் சந்தேகத்திற்கு இடங்கொடுக்காது. அறுபத்து மூன்று விக்கிரகங்களும் சரியாக இருக்கின்றனவா என்று யார் எண்ணிப் பார்க்கப்போகிறார்கள்?

உ. கு:- உமது புத்திசாலித் தனம் மெச்சத்தகுந்தது

நா. கு:- இல்லாமலா இந்தச்சிவாலயமே எனது ஆதிக்கத்தில் உள்ளது, அதிகாரம் வேறொருவரிடமிருந்தாலும்! சரி, வந்த காரியம் சீக்கிரம் ஆகட்டும்.

உ. கு:- ஆனல் விக்கிரகத்தைத் திருடுவது பாபமல்லவா?

நா. கு:- நமக்கேது பாபமும் புண்ணியமும்!மேலும் இரண்டிற்கும் வேண்டிய மந்திரம் நம்மிடம் இருக்கும்போது பயமேன்!

உ. கு:- சரி சுவாமி, இதோ இரண்டு விக்கிரகங்கள்.

நா. கு:- மற்ற அறுபத்தொரு விக்கிரகங்களேயும் சந்தேகத்திற்கு, இடங்கொடாதபடி வைத்துவிடவும்.

உ. கு:- இதோ செய்து விடுகிறேன்.

நா. கு:- இச்செய்கை நம் இருவரைத் தவிர வேறுயாருக்கும்......

உ. கு:- தெரியவே தெரியாது.

நா. கு. மெச்சினேன் உமது திறமையை.

உ. கு:- ஆனல், எனக்கும் பங்கு ....

நா. கு:- நிச்சயமாக உண்டு.

காட்சி 2

இடம்:- திருவாரூர்
காலம்:- காலே
உறுப்பினர்:- பணக்காரப் பக்தர், சிவாலய தர்மகர்த்தர் நாகராச நம்பி குருக்கள்.

பணக்கார பக்தர்:- சுவாமி க்ஷேம லாபம் எப்படி?

நா. கு:- எல்லாம் சிவானுக்கிரகத்தால் இது வரைக்கும் நன்மையாத்தான் இருக்கு.

ப. ப. ஊரில் உங்களுக்கு இருக்கும் செல்வாக்கு...

தருமகர்த்தா:- எனக்குக் கூட கிடையாது.

நா. கு:- பெரியவாள் அப்படிச் சொல்லக்கூடாது. எல்லாம் உங்க தயவுதான்.

ப. ப:- நமது அரசர் கிருஷ்ண தேவராயருக்கும் உம்மிடம் நல்ல மதிப்பு.

நா. கு:- ஆண்டவன் அநுக்கிரகம் அப்படி இருக்கு.

த:- என்னமோ க்ஷேமமா இருங்கோ.

நா. கு:- பக்தாளுடைய கைங்கரியம் கோயிலுக்கு ஒன்றும் காணுமே.

ப. ப:- அடியேன் அதைப்பற்றிச் சொல்லத்தானே வந்தேன்.

நா. கு:- ஆகா, பேஷாச் சொல்லுங்கோ. உங்க ஆசையைப் பூர்த்தி செய்ய நான் காத்துக்கிட்டிருக்கேன்.

ப. ப:- தாங்கள் என் விருப்பத்திற்குத் தடையாக ஏதேனும்......

நா. கு:- சொல்லுவேன்னு பயப்பட்டீர்களாக்கும். தாங்கள் கூடவா அப்படித் தப்பா நினைக்கணும், உங்கள் வாயிலிருந்து ஏதாவது கைங்

கரியத்தை எதிர்பார்த்துத் தானே இருக்கேன். தைரியமாகச் சொல்லுங்கோ, எதும்வேண்டுமானாலும் செய்யறேன்.

ப. ப:- உங்களுக்குத்தான் தெரியுமே நான் தினந்தோறும் ஆலயத்தில் தொண்டு செய்கிறேனென்று.

த:- அந்நிலேயேதானே நீங்கள் வாழ்நாளைக் கழிக்கின்றீர்கள்.

ப. ப:- இப்பொழுது எனக்கு ஒரு ஆசை.

நா. கு:- அது என்னவோ? தாராளமாகச் சொல்லுங்கோ.

ப. ப:- பிரமாதம் ஒன்றுமில்லை. ஆலயத்திலுள்ள எல்லா மூர்த்திகளுக்கும் புது ஆடைஅணிவித்து...

த:- கண் குளிரப் பார்க்கணும், அதுதானே உங்கள் விருப்பம்.

நா. கு:- ஆகா, அதுக்கென்ன. அப்படியே செய்துட்டா போறது.

த:- அது மிகவும் நல்ல காரியமாச்சே.

நா. கு:- இன்னும் பத்துநாளில் அறுபத்துமூவர் திருவிழா வரப் போகுதல்லவா, அன்றைக்குக் காலையில் எல்லா மூர்த்திகளுக்கும் அபிஷேகம் செய்து புது ஆடை சாத்திவிடலாம்.

த:- பேஷான யோசனை. குருக்களுக்குச் சொல்ல வேண்டுமா என்ன!

நா. கு:- தாங்கள் (பக்தரைப் பார்த்து) ஆடைகளை வாங்கிவைத்துக் கொள்ளுங்கள். எல்லா ஏற்பாடும் நான் செய்து விடுகிறேன்.

ப. ப:- ரொம்ப சந்தோஷம். அப்படியே செய்து விடுகிறேன்.

காட்சி 3

இடம்:– திருவாரூர்
காலம்:-காலை
உறுப்பினர்:- நாகராச நம்பி குருக்கள், கன்னன், பணக்கார பக்தர், முனியன் —(பக்தரின் வேலையாள்)

நா. கு:- யாரப்பா வீட்டில் கன்னன் இருக்கானே?

க:-சாமி, தண்டம்.

நா. கு:- டேய், இந்தா இதைப் பிடி.

க:-ஏது சாமி இது. விக்கிரகம் அழகா இருக்குதே.

நா. கு:- டேய், கத்தாதே, கொடுக்கிறதை வாங்கிவைச்சுக்கோ, ஏது கீதுண்ணு கேக்காதே.

க:- மன்னிக்கணும் சாமி, நீங்க போய்வாங்க.

* * *

ப. ப:-முனியா, இந்தத்துணிகளை வீட்டில் கொண்டுபோய் வை. நான் ஒரு வேலையா கன்னன் வீட்டிற்குப் போயிட்டு வறேன்.

மு:- சரி, எசமான்.

ப. ப:– (கன்னன் வீட்டில்) ஏம்பா, கொஞ்சம் இப்படிவர்ராயா?

க:- கும்பிடுகிறேனுங்க சாமி

ப. ப:- என் வேலையை கவனிக்கிறாயாப்பா.

க:- சாமி அதுதான் செய்யறேனுங்க.

ப. ப:- சீக்கிரம் ஆகட்டும், நாம் கூப்பிடும் போது எதையோ அவசரமாக மூடிவைச்சுட்டு வந்தியே, அது என்னப்பா.

க: அது ஒண்ணுமில்லிங்கோ சாமி, ஒரு உரு செய்யச் சொன்னாரு நம்ம குருக்கள் சாமி.

ப. ப:- சரி. நான் போயிட்டு வறேன்.

காட்சி 4

இடம்:- திருவாரூர்ச் சிவாலயம்
காலம்:காலை. அறுபத்துமூவர் விழா.
உறுப்பினர்:- பணக்காரபக்தர், நாகராச நம்பி குருக்கள் உதவி குருக்கள்

ப. ப:– சுவாமி, விநாயகர், முருகர், அம்பிகை, தியாகராசர், நடராசர், முதலிய மூர்த்திகளுக்குப் புத்தாடை அணிந்தாய்விட்டது. இனி அறுபத்து மூவர் விக்கிரகங்களுக்கு ஆரம்பம செய்யலாமே.

நா. கு:- ஐயா, தாங்கள் அதிகக் களைப்பாயிருக்கிறீர்களே, சற்று இளைப்பாறுங்கள். இன்னும் கொஞ்சம் தான் பூசையிருக்கிறது, சீக்கிரமே முடிந்துவிடும்.

ப. ப:- பரவாயில்லை. இந்தக்களைப்பெல்லாம் நான் பொருட்படுத்த மாட்டேன். மீதியுள்ள பூசையையும் கூட இருந்து பார்த்து விட்டு எல்லாம் முடிந்தபிறகே போகிறேன்.

நா. கு:-(உதவிக்குருக்களிடம்)மீதியுள்ள பூசையை நீரே கவனித்துக் கொள்ளவும். எனக்கு மிகவும் களைப்பாயிருக்கிறது நிற்கமுடியவில்லை. நான் போகிறேன்.

உ. கு:- (பக்தரை நோக்கி) ஐயா ஆடையைக் கொடுங்கள். நானே பூசையை நடத்துகிறேன்.

ப. ப:- ஒவ்வொன்ருக ஆகட்டும்.

[பக்தர் புத்தாடைகளை ஒவ்வொன்ருக எடுத்துக் கொடுத்துக் கொண்டே வந்தார். ஆனுல் அங்கிருந்த கடைசி விக்கிரகத்திற்கு ஆடையைக் கொடுத்து முடிந்தவுடனே அவர் கையில் இரண்டு ஆடைகள் மீதியாக நின்று விட்டன! பக்தரின் வியப்பைச் சொல்லமுடியாது. திடுக்கிட்டுப் போனுர். எத்தனை ஆடைகள் வேண்டுமென்று முன்னதாகவே கணக்கிட்டு தனித் தனியாக வைத்திருந்தார். அறுபத்து மூவர் விக்கிரகங்களுக்காக வைத்தவற்றிலே இரண்டு ஆடைகள் மட்டும் மிஞ்சுவதென்ருல் அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. சிலைகளை முதலிலிருந்து வரிசையாக எண்ணிப்பார்த்தார். ஆனுல் அறுபத்து மூன்று இருக்கவேண்டிய இடத்தில் அறுபத்தொரு சிலைகளே இருந்தன! இரண்டு சிலைகளைக் காணவில்லை. நினைக்கும்பொழுது அவருக்குச் சொல்லொணுக்கோபம் உண்டாயிற்று. உதவிக்குருக்களைக் கேட்கலாம் என்று போனுர். அவரோ அங்கு இல்லை. பூசைகளை முடித்துக் கொண்டு அந்தக் குருக்களும் போய்விட்டார். பக்தர் மனம் பதறியது. நாகராச நம்பி குருக்கள் இருக்கும் இடத்தை நாடினுர்.]

ப. ப:- என்ன சுவாமி, மிகவும் ஆச்சரியமாயிருக்கிறதே. அறுபத்து மூவர் சிலைகளிலே இரண்டு சிலைகளைக் காணேமே. அவை எங்கே போய்விட்டன?

நா. கு:- சிலையைக் காணேமா? என்னய்யா உளறுகின்றீர்.

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.